1981 ஆகஸ்ட் 21]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள் மொழிந்த இரங்கல் தீர்மானத்தின் மாண்புமிகு எதிர்க்கட்சி துணைத் தலைவர் அவர்களும் மற்ற எல்லாக் கட்சிகளின் தலைவர்களும் தெரிவித்த துயர உணர்வோடு என்னுடைய ஆழ்ந்த துயரத்தையும் இரங்கலையும் இணைத்துக் கொள்கிறேன்.

மறைந்த அந்தப் பெரியவருக்கு மரியாதை தெரிவித்து, இரங்கல் தீர்மானத்தை நிறைவேற்றும் வகையிலே உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நின்றதன் மூலம் தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மறைந்த அந்தப் பெரியவருக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் பேரவையின் நிகழ்ச்சிகள் 15 நிமிடங்களுக்கு ஒத்திவைக்கப்பெறுகின்றன.

பின்னர் பேரவை முற்பகல் 11-15 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

மீண்டும் பேரவை 11-30 மணிக்கு, மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் கூடியது.

2. அறிவிப்பு

மாற்றுத் தலைவர்களின் பட்டியல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 9 (1)ன் கீழ், கீழ்க்கண்ட உறுப்பினர்கள் 3 வது கூட்டத் தொடரின் மாற்றுத் தலைவர்களாக நியமிக்கப்பெறுகிறார்கள்.

திரு. ந. குலசேகரபாண்டியன்.

திரு. செ. செம்மலை.

திரு. இரெ. இராசமாணிக்கம்.

திரு. எல். இளையபெருமாள்.

திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்.